ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/81 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20

*2141/81 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (x) (*அ*)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும்* PV *72548 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018, யூலை மாதம் 11 ஆந் திகதிய 2079/ 35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை* II *ஐ, அதன் நிரல்* I *இலும் மற்றும் அதனது நிரல்* II *இன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “தகவல் தொழில்நுட்ப இளமாணி” என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்* I *மற்றும்* II *இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றறேன்.*

1A - PG 4650— 517 (2019/09)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (05) ஆண்டுகால மீளாய்விற்கு அமைய இதற்கான II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

சேஜஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது வியாபார நிர்வாக இளமாணி தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கென மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது பின்வரும் ஆகக் குறைந்த நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(அ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தக துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்கு சமமானவை; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக் கற்கைநெறியுடன் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S).

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கம் |
|---|---|
| வியாபார நிர்வாக இளமாணி | பிபிஏ |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, செத்தெம்பர் 18.

10 - 139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.